துறைசையாதீன வெளியீடு-6

உ

சிவமயம்.

திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறையாதீனத்து மகாவித்துவான்
சபாபதி நாவலரவர்கள்
மொழிபெயர்த்தியற்றிய

இராமாயண தாற்பரிய சங்கிரகம்.

அவ்வாதீனத்து
இருபதாவது மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்
கட்டளைப்படி

அவ்வாதீனத்து வித்துவான்
வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை
இயற்றிய உரையுடன்

1943

கும்பகோணம்
நாஷனல் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

27-3

சிவமயம்.

முன்னுரை.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணை
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பாநு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி தழைக மாதோ.

இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்பது வடமொழியில் ஸ்ரீமத் அப்பயதீக்ஷிதரால் இயற்றப்பட்ட நூலாகும். அதிற் கூறப்படும் விஷயம் ஆதிகவியாகிய வான்மீகி முனிவர் தாமியற்றிய இராமாயணமாகிய உத்தம காவியத்தில் தொனிவிருத்தியால் சிவபெருமானது பரத்துவத்தை வெளியிட்டனரென்பதாம். அந்நூலிலுள்ள சுலோகங்கள் இருபத்தைந்து. அந்நூலுக்கு உரையும் நூலாசிரியர் இயற்றியிருக்கின்றார்.

இவ்வரிய நூற்பொருளை வடமொழி ஞானமில்லாதவரும் அறிதல் வேண்டுமென்னும் பெருவிருப்பால் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனத்தில் நாற்பது வருடங்களுக்குமுன் மகாவித்துவானாகவிருந்த யாழ்ப்பாணத்து வடகோவைச் சபாபதி நாவலரவர்கள் எளிய தமிழ்நடையில் மொழிபெயர்த்தியற்றினார்கள்.

இந்த மொழிபெயர்ப்புநூல் இப்பொழுது கிடைத்தல் அரிதாகலான், பழைய நூல்களைப் பேணுவதிற் சிரத்தையும் சைவ சித்தாந்தத்தை வளர்ப்பதிற்பேரார்வமுமுள்ள அத்திருவாவடுதுறையாதீனத்து 20-வது மகாசந்நிதானமாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ல ஸ்ரீ: அம்பலவாண தேசிக சுவாமிகள் காலநிலையைக் கருதி இந்நூலுக்கு ஓர் உரை பிரமாண சகிதம் எழுதி வெளியிடல் வேண்டுமென்று பெருங் கருணையோடு அடியேனுக்குப் பணித்தருளினார்கள். அவர்கள் காற்றலை

யேவல் என் நாய்த்தலை யேற்று இப்பொழுது இத்தமிழ்நூற் செய்யுட்களுக்குப் பதவுரையும் பிரமாணங்களும் என் அறிவு சென்ற அளவில் எழுதியிருக்கிறேன். குணங்கொண்டு கோதாட்டுமாறு பெரியோர்களைப் பிரார்த்திக்கிறேன்.

அணங்குஞ் சமய நூற்றலைமை அவனூர் தகைத்தாய் நந்திமுனி
கணங்கட் களித்த சிவஞான போதக் கதிரூ னெறிகாட்டிப்
பணங்கொ ளரவர் துறைசையில்வாழ் பஞ்சாக் கரதே சிகன்மலர்த்தாள்
வணங்க வழுத்த மனத்திருத்த வாய்த்த பிறப்பை வாழ்த்துவாம்.

திருவாவடுதுறை,
சித்திரபாநுஸு
தைமீ 8உ

வி. சிதம்பர ராமலிங்க பிள்ளை,
ஆதீன வித்துவான்.



திருக்கயிலாய பரம்பரைத்
திருவாவடுதுறை ஆதீனத்து
20-வது மகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள்.

சிவமயம்.

இராமாயண தாற்பரிய சங்கிரகம்.

தற்சிறப்புப் பாயிரம்

தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளும் கூறு கின்ற திச்செய்யுளென்பது.

எங்குமொரு தானகி நிறைகைலைச்
 சிவக்களிறன் றிமையச் சாரற்
றுங்கவருட் பிடிதழீஇ யளித்தவொரு
 கயமுனிதா டொழுது போற்றிப்
பொங்குபுகழ் வடமொழியிற் பூசுரர்கோ
 னப்பதீக் கிதன்முன் செய்த
சங்கையில்ரா மாயணத்தின் ருற்பரிய
 சங்கிரகந் தமிழாற் செய்வாம்.

இதன் பொருள்:-

எங்கும் ஒரு தானகி நிறை-எவ்விடங்களிலும் ஒப்பற்ற தானேயாகி நிறைந்துள்ள, கைலைச் சிவக் களிறு-கயிலாய மலையிலே எழுந்தருளி யிருக்கின்ற சிவபெருமானாகிய ஆண்யானை, அன்று-அக்காலத் திலே, இமயச் சாரல் துங்க அருட்பிடி தழீஇ-இமய மலையின் தாழ்வரையிலே வளர்ந்துவந்த அழகினை யுடைய உமாதேவியாகிய பெண்யானையைத் தழுவி, அளித்த-பெற்றருளிய, ஒரு கயமுனிதாள் தொழுது போற்றி-விநாயகப்பெருமானாகிய ஒப்பற்ற யானைக் கன்றினது திருவடிகளை வணங்கித்துதித்து, பொங்கு புகழ் வடமொழியில்-நிரம்பிய புகழினையுடைய ஆரிய மொழியில், பூசுரர்கோன் அப்பதீக்கிதன் - பிரா மணத்தலைவராகிய அப்பதீக்கிதர், முன்செய்த-முற்

காலத்திலே இயற்றியருளிய, சங்கையில் ராமாயணத்தின் தாற்பரிய சங்கிரகம்-சந்தேகமில்லாத ராமாயண தாற்பரிய சங்கிரகமென்னும் நூலை, தமிழாற் செய்வாம்-தமிழிலே செய்வோம் என்பதாம்.

இது வடமொழியில் அப்பதீக்ஷிதர் இயற்றிய இராமாயண தாற்பரிய சங்கிரகத்தை விநாயகப் பெருமானை வணங்கித் தமிழிலே மொழிபெயர்த்துச் செய்வோம் என்று கூறியவாறு.

நூல்.

ஈண்டு முதற்கண் வான்மீகிபகவான் இராமாயணத்தை அருளிச்செய்த முறை கூறப்படுகின்றது.

1. ஆதிகவி மன்னுகிப் பிரம னென்ன
வறைவரிய பிரதாப முடைய ஞகி
போத்முதுக் குறைந்தவான் மீகிமா முனிவ
ஞலகளிக்கும் விண்டுவைமே லிட்டி யற்று
நீதிபெறு பிரபந்த மதனி லூன்ற
னிகரில்பரத் துவத்தைவியத் தியினுல் யாத்தான்
மாதரா ளுமையோடு மன்றில்வேளி நின்று
மலமகற்றி யுயிர்க்கருளும் வான்கருணைக் கடலே

(இ-ள்) மன்றில்-சிற்சபையிலே, மாதர் ஆள் உமையோடும் - அழகினை யடிமைகொண்ட உமாதேவியாரோடும், வெளிநின்று-வெளியாக நின்று, உயிர்க்கு மலம் அகற்றி அருளும்-ஆன்மாக்களுக்கு மும்மலங்களையும் நீக்கி அனுக்கிரகம்செய்யும், வான் கருணைக்கடலே-சிறந்த கிருபாசமுத்திரமாகிய சிவ பெருமானே, ஆதிகவிமன் ஆகி-முதற்கவிராஜனுகி, பிரமன் என்ன-பிரமதேவர் என்னும்படி, அறைவரிய பிரதாபம் உடையன் ஆகி - சொல்லுதலரிய

கீர்த்தியை யுடையவனுகி, ஓதி-வேதமுதலிய கலைக ளனைத்தையும் கற்று, முதுக்குறைந்த - பேரறிவு படைத்த, வான்மீகிமாமுனிவன் - வான்மீகியென் னும் சிறந்த முனிவன், உலகு அளிக்கும் விண்டுவை மேலிட்டுஇயற்றும்-உலகங்களைக்காக்கின்ற விஷ்ணு மூர்த்தியைப் பாட்டுடைத் தலைவனுகவைத்துச் செய் துள்ள, நீதிபெறு பிரபந்தமதனில்-நீதிகளை அடக் கிய நூலாகிய இராமாயணம் என்னும் இதிகாசத் தில், உன்றன் நிகரில் பரத்துவத்தை-தேவரீருடைய ஒப்பில்லாத தலைமையை, வியத்தியினல் யாத்தான்- தொனி விருத்தியால் வெளியிட்டான். (எ-ம்)

இதனுனே வான்மீகி பகவானது கருத்துச் சிவ பரத்துவத்தை நிலைநிறுத்துதலென்பது கூறப்பட் டது.

இனி அக்கருத்தினை வகுத்துரைத்தற்கண் அகத்தியமுனிவர் பெருமை கூறியவாற்ருற் போந்த சிவபரத்துவத்தினை நிலைநிறுத்துதல்கூறவெழுந் தது வருஞ் செய்யுளென்பது.

வேறு

2. அகத்திய முனிவ ஞச்சிர மத்தி
லமர்தரு மமரரா தியர்தா
மதித்தனை யோனை வழிபடு கின்ரு
ரேனச்சோலி மற்றவன் வாச
மகத்திறை யயன்மான் முதலியோர்க் கிருப்பு
வகுத்தரா மாயண மதுதான்
விதித்திட வில்லை யாண்டுனக் கிருப்பு
விமலதன் வயத்தஞ முதலே.

(இ-ள்) விமல-அநாதியே மலத்தினின்று நீங்கினவரே, தன் வயத்தனும் முதலே-சுவதந்திரராகிய முதல்வரே, அகத்திய முனிவன் ஆச்சிரமத்தில் அமர்தரும் அமரர் ஆதியர்தாம்-அகஸ்திய மகர்ஷி ஆச்சிரமத்திலிருக்கும் தேவர்கள் கந்தருவர்கள் சித்தர்கள் மேலான ருஷிகளென்பவர்கள், அனை யோனைமதித்து வழிபடுகின்றாரெனச்சொலி - அவ் வகத்திய மகர்ஷியைத் தம்மிற் சிறந்தோனாகக் கொண்டு வழிபடுகின்றார்களென்று சொல்லி, அவன்வாசம் - அவனுடைய ஆச்சிரமத்தில், மகத் திறை அயன் மால் முதலியோர்க்கு-இந்திரன் பிர மன் திருமால் முதலியவர்களுக்கு, இருப்பு வகுத்த ராமாயணமதுதான்- தானங்களைக்குறித்த இராமா யணம், ஆண்டு உனக்கு இருப்பு விதித்திடவில்லை- அவ்வகஸ்தியர் ஆச்சிரமத்தில் தேவரீருக்குத்தானங் குறித்திடவில்லை. (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

அத்ர தேவா: ஸகந்தர்வா: ஸித்தாச்ச பரமர்ஷய: |
அகஸ்த்யம் நியதாஹாரம் ஸததம் பர்யுபாஸதே ||
அத்ர தேவாச்ச யக்ஷாச்ச நாகாச்ச பதகைஸ்ஸஹ |
வஸந்தி நியதாஹாரா தர்மமாராதயிஷ்ணவ: ||

× × ×

ஸ தத்ர ப்ரஹ்மண: ஸ்தாநம் அக்நே: ஸ்தாநம் ததைவச ||
விஷ்ணோ: ஸ்தாநம் ததேந்த்ரஸ்ய ஸ்தாநம் சைவ விவஸ்வத:
ஸோமஸ்தாநம் பகஸ்தாநம் ஸ்தாநம் கௌபேரமேவ ச ||
தாதுர்விதாது: ஸ்தாநே ச வாயோ: ஸ்தாநம் ததைவ ச |
ஸ்தாநம் ச பாசஹஸ்தஸ்ய வருணஸ்ய மஹாத்மந: ||
ஸ்தாநம் ததைவ காயத்ர்யா வஸூநாம் ஸ்தாநமேவ ச |
ஸ்தாநம் ச நாகராஜஸ்ய கருடஸ்ய மஹாத்மந: ||
கார்த்திகேயஸ்ய ச ஸ்தாநம் தர்மஸ்தாநம் ச பச்யதி |

தானங்குறித்தவிடத்துக் கார்த்திகேயரென்றது சனற்குமார முனிவரை. அவரைக் கந்தரென்னும் வேதவழக்குப்பற்றி அப்பெயரான் அவர் ஆண்டுக் கூறப்பட்டார்.

இதனானே அகத்திய முனிவரது உறையுளிற் சிவபெருமானுக்குத் தானங்குறிக்கப்படாமை கூறப்பட்டது.

இனி அகத்திய முனிவர் உறையுளிற் சிவபெருமானுக்குத் தானங் கூறப்படாமையின் கருத்துக் கூற எழுந்தது வருஞ் செய்யுள் என்பது.

3. இந்துசே கரநிற் கிருப்பஃ தாண்டே
யிசைத்திடா வியல்பினாற் றவத்துச்
செந்தமிழ் முனியா லுபாசிக்கப் படுவோ
னீயென்கை தெளிதரக் கிளர்ந்து
வந்ததை யன்றே பாரிசே டத்தான்
மற்றத னுலனை யோனைச்
சிந்தையாற் பரவுந் தேவரி னதிக
னீயென்கை தெளிதரப் படுமால்

(இ-ள்) இந்துசேகர - சந்திரனைத்தரித்த திருமுடியை யுடையவரே, ஆண்டுநிற்கு இருப்பு அஃது இசைத்திடா இயல்பினால்-அகத்திய மகர்ஷியின் ஆச்சிரமத்தில் தேவரீருக்குத்தானம் அவ்விராமாயணம் கூறாத தன்மையினால், பாரிசேடத்தால்-பாரிசேடப் பிரமாணத்தால், தவத்துச் செந்தமிழ் முனியால் - தவத்தினையுடைய அகத்திய மகர்ஷியால், உபாசிக்கப்படுவோன் நீ என்கை - வழிபடப்படுவோர் தேவரீரே என்பது, தெளிதர-யாமெல்லாம் தெளியும்படி, கிளர்ந்து வந்தது-விளங்கி வெளிப்

பட்டது, அதனால்-அக்காரணத்தால், அனையோனை-அவ்வகத்திய மகர்ஷியை, சிந்தையாற் பரவுந்தேவரின்-மனத்தால் வழிபடும் இந்திரன் அயன்மால் முதலிய தேவர்களினும், அதிகன் நீ என்கை-சிறந்தோர் தேவரீரேயென்பது, தெளிதரப்படும்-தெளியப்படும். (எ-ம்)

பாரிசேடம்-ஒழிபு.

இதனனே அங்ஙனந்தானங் குறிக்கப்படாமையே சிவபெருமானது பரத்துவத்தை உணர்த்துமென்பது விளக்கப்பட்டது.

இனி இலவணவதை நிகழ்ச்சிபற்றிச் சிவபரத்துவம் கூறவெழுந்தது வருஞ்செய்யுளென்பது.

வேறு

4. இரகுநா தனிலவண வதைப்பொருட்டுத் தன்கை
யிருந்தவரி யுருவான சரத்தினைச்சத் துருக்கன்
கரமீயும் போழ்திலதன் பிரபாவங் கூறிச்
சிவனருளுஞ் சூலமவன் கைக்கொள்ளா வேலை
வரமேவு மிச்சரசந் நிரோதனத்தைச் செய்து
வதைத்தியசு ரனைச்சீமா னீலகண்டன் செய்கை
பரரேவர் கடப்பவரென் றுரைத்தனனுன் னிடத்துப்
பகர்ந்தவிந்த விசேடணமற் றேரிடத்தும் பாரேம்.

(இ-ள்) சிவபிரானே, இரகுநாதன் - இராமபிரான், இலவணவதைப்பொருட்டு-இலவணாசுரனைக் கொல்லும்பொருட்டு, தன்கைஇருந்த அரி உருவான சரத்தினை-தன்பாலிருந்த நாராயணாஸ்திரத்தை, சத்துருக்கன் கரம் ஈயும் போழ்தில் - சத்துருக்கன் கையில் ஈந்தருளும்பொழுது, அதன் பிரபாவங்

கூறி-அங்நாராயணாஸ்திரத்தின் பெருமையை எடுத்துச்சொல்லி, சிவன் அருளும் சூலம் அவன் கைக்கொள்ளா வேலை-சிவபெருமான் அவ்விலவணாசுரன் பிதா மது என்பவனுக்கு அளித்தருளிய சூலப்படையை அவ்விலவணன் கையில் எடாதசமயத்தில், வரம் மேவும் இச்சர சந்நிரோதனத்தைச் செய்து-மேன்மை பொருந்திய இவ்வஸ்திரப் பிரயோகத்தைச்செய்து, அசுரனை வதைத்தி - அவ்விலவணாசுரனைக்கொல்லு, சிமான் நீலகண்டன் செய்கை-சிமானாகிய சிதிகண்டனுடைய செயலை, பரர் எவர் கடப்பர்-வேறு எவர் கடப்பவர்கள், என்று உரைத்தனன் - என்று கூறியருளினன், உன்னிடத்துப் பகர்ந்த இந்த விசேடணம்-தேவரீரிடத்துச்சொல்லப்பட்ட இவ்விசேடணம், மற்று ஓரிடத்தும் பாரேம்-வேறு ஓரிடத்துங்காண்கிலேம். (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

நாயம் மயா ஸர: பூர்வம் ராவணஸ்ய வதார்திநா |
முக்த: சத்ருக்ந பூதாநாம் மஹாம்ஸ்த்ராஸோ பவிஷ்யதி ||

× × ×

ஏஷோஹி பூர்வதேவஸ்ய லோககர்து:ஸநாதந: |
சரஸ்தேஜோப்ரயோ ஹ்யேஷ யேந வோ பயமாகதம் ||
ஏஷவை கைடபஸ்யார்தே மதுநச்ச மகாசர: |
ஸ்ருஷ்டோ மஹாத்மநா தேந வதார்தம் தைத்யயோஸ்தயோ: ||
ஏவமேவ ப்ரஜாநித்வம் விஷ்ணோஸ் தேஜோமயம் சரம் |
ஏஷா சைவ தநு: பூர்வம் விஷ்ணோஸ்தஸ்ய மஹாத்மந: ||

× × ×

யச்ச தஸ்ய மஹச்சூலம் த்ர்யம்பகேண மஹாத்மநா |
தத்தம் சத்ருவிநாசாய மதோராயுத முத்தமம் ||

தத்ஸம்நிக்ஷிப்ய பவநே பூஜ்யமாநம்புந: புந: |
திச: ஸர்வா: ஸமாஸாத்ய ப்ராப்நோத்யாஹார முத்தமம் ||
யதாது யுத்தமாகாங்க்ஷந்பதி கச்சித் ஸமாஹ்வயேத் |
ததா சூலம் க்ருஹீத்வா து பஸ்மரக்ஷ: கரோதி ஹி ||
ஸத்வம் புருஷசார்தூல தமாயுத விநாக்ருதம் |
அப்ரவிஷ்டம் புரம் பூர்வம் த்வாரி திஷ்ட த்ருதாயுத: ||
அப்ரவிஷ்டம் ச பவநம யுத்தாய புருஷர்ஷப: |
ஆஹ்வயேதா மஹாபாஹோ ததோ ஹந்தாஸி ராக்ஷஸம் ||
அந்யதா க்ரியமாணேது அவத்ய: ஸபவிஷ்யதி |
யதி த்வேவம் க்ருதம் வீர விநாச முபயாஸ்யதி ||
ஏதத்தே ஸர்வமாக்யாதம் சூலஸ்ய ச விபர்யய: |
ஸ்ரீமத: சிதிகண்டஸ்ய க்ருத்யம் ஹி துரதிக்ரமம். ||

இதனானே சிவபெருமானது உயர்ச்சி சூலப் படையின் பெருமை கூறுமுகத்தாற் புலப்படுத்தி விளக்கப்பட்டது.

இனி வான்மீகி பகவான் மேற்கூறியவற்றைக் கூறுதலினுள்ள நயம் வெளியிடுகின்றது வருஞ் செய்யுளென்பது.

வேறு

5. சந்திர கண்ட சிகாமணி யுயர்வான்
மீகிதா னகத்திய முனிவற்
கிந்திர னயன்மான் முதலிய தேவ
ரிறைஞ்சிடு தகைமையஞ் சீமத்
திந்தகன் குரைக்கும் விசேடண வழக்கு
மிரவியின் குலமுத லிராம
சந்திர வசனத் துள்ளவென் றவற்கு
முன்சுணன் புடைமைசா தித்தான்.

(இ-ள்) சந்திரகண்ட சிகாமணி - நிலாத்துண்டத்தை யணிந்த திருச்சடையை யுடையவரே, உயர் வான்மீகிதான்-கவிகளிற்சிறந்த வான்மீகிபகவான், அகத்திய முனிவற்கு-அகத்திய மகர்ஷிக்கு, இந்திரன் அயன்மால் முதலிய தேவர் இறைஞ்சிடு தகைமையும்-இந்திரன் பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களால் வணங்கப்படுஞ்சிறப்பும், நன்கு உரைக்கும் இந்த ஸ்ரீமத் விசேடண வழக்கும்-தேவரீருக்கு நன்ருகச் சொல்லப்படும் இந்த ஸ்ரீமத் என்னும் விசேடணப் பிரயோகமும், இரவியின் குலமுதல்-சூரியகுல முதல்வனுகிய, இராமசந்திர வசனத்துள்ள என்று-இராமசந்திரனுடைய வசனத்தில் உள்ளன என்று கூறி, அவற்கும்-தனக்கேயன்றி அவ்விராம சந்திரனுக்கும், உன்கண் அன்புடைமை சாதித்தான்-தேவரீரிடத்து அன்பு உளதாந் தன்மையை நிலை நிறுத்தினன். (எ-ம்)

இதனனே வான்மீகிபகவானுக்கே யன்றி இராமபிரானுக்கும் சிவபிரான் திருவடிக்கண் அன்புளதாமாறு விளக்கப்பட்டது.

இனிச் சேதுபந்த நிகழ்ச்சிப்பற்றிச் சிவபரத்துவம் கூற வெழுந்தது வருஞ் செய்யுளென்பது.

வேறு

6. கடலகட்டி னுளவேந்தச் சேது வின்றேற்
கந்தத்தி னளசேது கட்டு மாறு
படைநிறுத்தப் பட்டனமன் யாரும் போற்றப்
படுமதன்க ணிராமன்பத் தினிக்கு முன்னர்
விடையில்வரும் பிரபுமா தேவ ரேற்கு
மிக்கபிர சாதமருள் செய்தா ரென்று
திடமுறமுன் னுரைத்திட்ட வுரையா லுன்கட்
சிரத்தையவற் குண்மைபிர சித்த மாமே.

(இ-ள்) சிவபிரானே, கடல் அகட்டின் உள-கடலிடத்தேயுள்ள, எந்தச்சேதுவின் தெற்கு அந்தத்தில்-எந்தச்சேதுவின் தெற்குஓரத்தில், நளசேது கட்டுமாறு படை நிறுத்தப்பட்டன-நளசேது கட்டும் வண்ணம் வானரப்படைகள் நிறுத்தப்பட்டன, யாரும் போற்றப்படும் அதன்கண்-மூவுலகத்தாரா லும் வழிபடப்பெறும் அந்தச் சேதுவினிடத்தில், இராமன் பத்தினிக்கு-இராமபிரான் தன் மனைவி யாகிய சீதாபிராட்டிக்கு, முன்னர் விடையில் வரும் பிரபு மாதேவர் எற்கு மிக்க பிரசாதம் அருள்செய் தார் என்று-பூர்வத்தில் இடபவாகனத்தில் எழுந் தருளிவரும் பிரபுவாகிய மகாதேவர் எனக்கு மிகுந்த பிரசாதம் அருளிச்செய்தாரென்று, திடமுறமுன் உரைத்திட்ட உரையால்-வலிமையுற முன்பு கூறிய சொல்லினல், உன்கண் சிரத்தை அவற்கு உண்மை பிரசித்தம் ஆம்-தேவரீடத்து இராமபிரானுக்கு விசேடக்கருத்து உண்மை வெளிப்படையாம். (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

ஏ தத்து த்ருச்யதே தீர்தம் ஸாகரஸ்ய வராநநே ।
யத்ர ஸாகரமுத்தீர்ய தாம் ராத்ரிமுஷிதா வயம் ॥

× × ×

அத்ர பூர்வம் மஹாதேவ: ப்ரஸாத மகரோத்ப்ரபு: ।

வான்மீகத்து வர்த்தமான கற்பமாகிய சுவேத வராக கற்ப அவதார நிகழ்ச்சிவரலாறு கூறப்பட லான் ஆண்டுவரும் முன்னர் என்பது அதற்கு முன் னையதாய்ப் பழைமையான லக்ஷ்மீகற்ப விருத்தாந் தத்தைக் குறிப்பதாகும். கூர்மபுராணத்து ராமசரிதை யில் இராமபிரான் சிவலிங்கப் பதிட்டை செய்தமை வெளிப்படை.

கூர்ம புராணவசனம் வருமாறு:-

'ஸேதுமத்யே மஹாதேவ மீசாநம் க்ருத்திவாஸஸம் |
ஸாமிஸோமலஸத்பாலம் ஸ்தாபயாமாஸ ராகவ: ||
தஸ்ய தேவோ மஹாதேவ: பார்வத்யா ஸஹ சங்கர: |
ப்ரத்யக்ஷ ஏவ பகவாந் தத்தவாந் வரமுத்தமும் ||
யே த்வயா ஸ்தாபிதம் லிங்கம் த்ரக்ஷ்யந்தி மநுஜர்ஷபா: |
மஹாபாதக நிர்முக்தாஸ் தேயாந்தி பராமாம் கதிம் ||
அந்யாநி சைவ பாபாநி ஸ்நாதஸ்யாத்ர மஹோதெள |
தர்சநாதேவ லிங்கஸ்ய நாசம் யாந்தி ந ஸம்சய: ||
யாவத்ஸ்தாஸ்யந்தி கிரயோ யாவதேவ ச மேதிநீ |
யாவத் ஸேதுச்சதாவச்ச ஸ்தாஸ்யாம் யத்ர திரோஹித: ||
ஸ்நாநம தாநம் தப: ச்ராத்தம பவிஷ்யத்யக்ஷயம் பலம் |
ஸ்மரணுதேவ லிங்கஸ்ய திநபாபம் ப்ரணச்யதி || '

மேலும் தேவருள் வைத்து மகாதேவரெனப் படுவோர் சிவபெருமானரேயாதலின் ஆண்டுவரும் மகாதேவசப்தம் வேறெவர்பாலும் செல்லுதலில்லை. சிவபெருமானரே மகாதேவரென்பது நிபுணதரராகிய சுதரிசனுசாரியராலே சுருதிசூக்திமாலையில் வஜ்ர லேபஞ் செய்யப்பட்டது.

இதனுனே முன்னர் இராமபிரான் சிவபூசை செய்து வரம் பெற்றமை கூறப்பட்டது.

இனி இராமசரித நிகழ்ச்சி விசேடங்களால் இராமபிரானுக்குச் சிவபெருமானிடம் பத்தியுளதாமாறு கூறத்தொடங்கி முதலில் ஆதித்திய விருதயம் பற்றிச் சிவபரந்துவம் கூறவெழுந்து வருஞ் செய்யுளென்பது.

வேறு

7. நீண்டபெரும் பூசலா னிராமனு குலத்தி
னிலவுமன முடையனுய்த் துன்பவிட நீங்க
மாண்டதவ முடையவகத் தியமுனிவ னருளு
மந்திரநல் லுபதேசஞ் செவிவாயான் மாந்தி
மூண்டபகை வரைவேறற் பொருட்டுனது வடிவா
முளரிநா யகன்றனையே சரண்புகுந்தான் றுதியால்
வேண்டுபிர மாச்சுதனே டுருத்திரனுக் கீச
விளக்குமா லிதுவுநீ பரம்பொருளேன் பதையே

(இ-ள்) வேண்டு-பிரார்த்திக்கிற, பிரமாச்சுத னேடு உருத்திரனுக்கு ஈச-பிரமன் அச்சுதன் ஈசா னனென்பவர்களாகிய மும்மூர்த்திகட்கும் தலைவரே, நீண்டபெரும் பூசலான்-நெடிய பெரிய போரினல், இராமன் ஆகுலத்தில் நிலவும் மனம் உடையவனுய்-இராமபிரான் துன்பத்திற் பொருந்திய மனமுள்ள வனுய், துன்பவிடம் நீங்க-அத்துன்பமாகிய விஷம் அகல, மாண்டதவமுடைய அகத்திய முனிவன் அரு ளும்-மாட்சிமைப்பட்ட தவத்தினையுடைய அகத்திய மகர்ஷி அருளிச்செய்த, மந்திர நல்உபதேசம் செவி வாயால் மாந்தி-நல்ல மந்திரோபதேசமாகிய ஆதித் தியவிருதய அமிருதத்தைச் செவிவாயிலாக உண்டு, மூண்ட பகைவரை வேறற்பொருட்டு-சினந்தெழுந்த பகைவர்களாகிய அரக்கர்களை வெல்லுவதற்கு, உனது வடிவாம் முளரிநாயகன் றனையே துதியால் சரண்புகுந்தான் - தேவரீரது மூர்த்தமாகிய சூரி யனையே தோத்திரத்தினல் அடைக்கலமாகச் சேர்ந் தான், இதுவும்நீ பரம்பொருள் என்பதை விளக்கும்-இச்செய்தியும் தேவரீரே மேலாம் பொருளென்பதை தெளிவுபடுத்தும். (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

"ததோ யுத்தபரிச்ராந்தம் ஸமரே சிந்தயாஸ்திதம் ।
ராவணம் சாக்ரதோ த்ருஷ்ட்வா யுத்தாய ஸமுபஸ்திதம் ॥
தைவதைச்ச ஸமாகம்ய த்ரஷ்டுமப்யாகதோ ரணம் ।
உபகம்யாப்ரவீத்ராமம் அகஸ்த்யோ பகவாந்ருஷி: ॥

× × ×

ப்ரஹ்மேசாநாச்யுதேசாய ஸூர்யாயாதித்யவர்சஸே ।
பாஸ்வதே ஸர்வபக்ஷாய ரௌத்ராய வபுஷே நம: ॥

இதனுனே இராமபிரான் சூரியனேச் சரணடைந்தமை கூறுமுகத்தாற் சிவபெருமான் சூரியமூர்த்தியென்பதும், சூரியன் அவனது வடிவமென்பதுங் கூறப்பட்டன.

இனி இராவணவதம் முடிந்தும் இராமபிரான் அரசியலோம்புதற்குக் காரணங்கூறுகின்றது வருஞ் செய்யுளென்பது.

வேறு

8. நிருதர்கோன் மாண்டபினர்ப் பிரமனிரா
மனேநோக்கி நிகரி லாயெங்
கருமமுனுன் முடிவெய்திற் ருகலினீ
சுவர்க்கத்தைக் கடிது சேல்லேன்
றுரைதந்து மூரடைந்து சிலகால
மரசியலே யோம்பி மேலாம்
பரிமேதம் வேட்டியேன்ற வுன்னுரையங்
கீகரித்தான் பரம தேவே.

(இ-ள்) பரமதேவே - மகாதேவரே, நிருதர் கோன் மாண்டபினர்-அரக்கர் தலைவனாகிய இராவணன் இறந்த பிற்பாடு, பிரமன் இராமனை நோக்கி-(வந்தடைந்த தேவசமூகத்தில்) பிரமதேவர் இராமபிரானை நோக்கி, நிகரிலாய்-ஒப்பில்லாதவனே, எங் கருமம் உன்னால் முடிவெய்திற்று ஆகலின்-இராவண வதமாகிய எங்களுடைய காரியம் உன்னால் முடிவடைந்துவிட்டதாகலின், நீ சுவர்க்கத்தைக் கடிது செல் என்று உரைதந்தும் - நீ சுவர்க்கலோகத்தில் விரைந்து செல் என்று கூறினராகவும், ஊரடைந்து சிலகாலம் அரசியலை ஓம்பி-அயோத்தியாபுரியை எய்திச்சிலகாலம்அரசு முறையைப்பேணி (நல்லோர்களுக்கு மகிழ்ச்சிகொடுத்து இக்ஷ்வாகு மரபை நிலைநிறுத்தி,) மேலாம் பரிமேதம் வேட்டி என்ற-சிறந்த அசுவமேதயாகம் புரி என்று திருவாய் மலர்ந்தருளிய, உன் உரை அங்கீகரித்தான் - தேவரீரது சொல்லை ஏற்றுக்கொண்டான். (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

ததிதம் ந: க்ருதம் கார்யம் த்வயா தர்மப்ருதாம் வர |
நிஹதோ ராவணோ ராம ப்ரஹ்ருஷ்டோ திவமாக்ரம ||

× . × ×

ப்ராப்ய ராஜ்யமயோத்யாம் ச ஸாந்த்வயித்வா ஸுஹ்ருஜ்ஜநம் |
இக்ஷ்வாகூணாம்குலே ராஜா ஸ்தாபயித்வா மஹாபல ||
இஷ்ட்வா துரகமேதேந ப்ராய சாதுத்தமம் யச: |
ப்ராஹ்மணேபயோ தநம் தத்வா த்ரிதிவம் கந்துமர்ஹஸி ||

இதனானே தேவகாரியம் முடிந்தும் இராமபிரான் அரசியலை யோம்புதற்கு ஏதுவாகிய சிவாக்ஞையின் பெருமை கூறுமுகத்தான் சிவபரத்துவம் கூறப்பட்டது.

இனி அசுவமேதம் பற்றிச் சிவபரத்தும் கூறு கின்றது வருஞ் செய்யுளென்பது.

வேறு

9 தாசரதி திகிரிதனை யுருட்டி யிந்தத்
தராதலத்தைப் பொதுநீக்கி யாண்டு சின்னாண்
மாதவன்றான் பரிவேள்வி தன்னா லுன்னாற்
பூசிக்கு மாண்புடைய னென்ற தம்பி
யாசைதனை வேறுகதை காட்டிநிரா கரித்திட்
டருட்கடலே விசுவத்திற் கதிகனே வஞ்சப்
பேதைகளுக் கறிவரிய பிரானே நின்னைப்
பேட்டுவழி பட்டனமன்ற் றதனு லம்ம.

(இ-ள்) அருட்கடலே-கிருபாசமுத்திரமே, விசுவதிற்கு அதிகனே-விச்சுவாதிகனே, வஞ்சப்பேதைகளுக்கு அறிவரிய பிரானே - வஞ்சத்தையுடைய மூடர்களுக்கு அறியமுடியாத தலைவனே, தாசரதி-இராபிரான், சிலநாள் திகிரிதனை யுருட்டி இந்தத் தராதலத்தைப் பொதுநீக்கி ஆண்டு-(தேவரீர் அருளியவாறு) சிலகாலம் தனது ஆக்ஞா சக்கரத்தைச் செலுத்தி இப்பூமியை ஏகசக்கிராதிபத்தியமாக ஆட்சிபுரிந்து, உன்னால் பரிவேள்விதன்னால் மாதவன்றான் பூசிக்கும் மாண்புடையன் என்ற தம்பி ஆசைதனை - உன்னால் அசுவமேத யாகத்தால் விஷ்ணுமூர்த்தியே வழிபடப்படும் பெருமையுடையான் என்று கூறிய இலக்குமணனது ஆசையை, வேறுகதை காட்டி நிராகரித்திட்டு-(தேவர்கள் திருமாலைக் குறித்து அசுவமேதமியற்ற இந்திரன் விருத்திராசுரனைக்கொன்ற பாவத்தினீங்கினான் என்று இலக்குமணன் கூறிய கதையை ஏற்றுக்கொள்ளாது, இளன் பரிவேள்வியால் தேவரீரை வழிபட்டுத் தான் அடைந்திருந்த பெண்ணுருவம் நீங்கினான்

என்ற பிறிதோர் கதையை எடுத்துக்கூறி மறுத்து, அதனுல் நின்னைப் பெட்டு வழி பட்டனன் - அவ் வசுவமேதத்தால் தேவரீரையே விரும்பி வழி பட்டனன். (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

'ப்ரசார்ரம் ச ஜகத்ஸர்வம் ஸஹஸ்ராக்ஷே ப்ரதிஷ்டிதே ।
யஜ்ஞம் சாத்புத ஸங்காசம் ததா சக்ரோऽப்யபூஜயத் ॥'

× × ×

'நாக்யம் பச்யாமி பேஷஜ்யமந்த்ரேண வ்ருஷத்வஜம் ।
நாச்யமேதாத்பரோ யஜ்ஞ: ப்ரியச்சைவ மஹாத்மந: ॥'

× × ×

'தேஜு ராமவச: ச்ருத்வா நமஸ்க்ருத்ய வ்ருஷத்வஜம் ।
அச்வமேதம் த்விஜா: ஸர்வே பூஜயந்தி ஸ்ம நித்யத: ॥'

இதனுனே மேதபதி சிவபெருமானே யென்பது நிறுவப்பட்டது.

இனி வான்மீகி பகவான் உவமை வாயிலாகவும் சிவபரத்துவம் வெளியிட்டமை கூறுகின்றது வருஞ் செய்யுளென்பது.

வேறு

10. உன்றிரு வடிக்க ணுறுதியா மன்பு
முயர்பர தத்துவக் கருத்து
மன்றவே யிராம னுடைமைவான் மீகி
யிவைதம்மா ணறிதர வகுத்து
வன்றிறற் றம்பி சீதையோ டமர்ந்த
மன்னிரா மன்னுமை யரியோ
டொன்றிய சிவனை யொப்பனேன்
றுரைத்துன் னிடத்துள தன்னன்புந் தேரித்தான்.

(இ-ள்) சிவபிரானே, வான்மீகி-வான்மீகிபகவான், இவை தம்மான்-மேலே கூறிய காரணங்களால், உன் திருவடிக்கண் உறுதியாம் அன்பும்-தேவரீரது திருவடியிலே உறுதியான பக்தியும், உயர் பரதத்துவக் கருத்தும்-தேவரீர்பால் மேலாம் பரம்பொருள் என்ற கருத்தும், இராமன் மன்ற உடைமை-இராமபிரான் நிச்சயமாக வுடையவனயிருக்குந்தன்மையை, அறிதர வகுத்து-யாமெல்லாம் அறியுமாறு வகுத்துரைத்தும், வன்திறல் தம்பி சீதையோடு அமர்ந்த மன் இராமன்-மிகுந்த வலிமையுடைய தம்பியாகிய இலக்குமணனேடும் தேவியாகிய சீதாபிராட்டியோடும் இருந்த தலைவனுகிய இராமபிரான், அரி உமையோடு ஒன்றிய சிவனை ஒப்பன் என்று உரைத்து-திருமாலோடும் பார்வதி தேவியோடும் பொருந்திய சிவபெருமானைப் போல்வன் என்று உவமை முகத்தாற் கூறியும், உன்னிடத்து உள தன் அன்பும் தெரித்தான்-தேவரீரிடத்துள தன்னுடைய பக்தியையும் தெரிவித்தான் (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

க்ருதாபிஷேகஸ்ஸ ரராஜராம:
ஸீதாத்விதிய: ஸஹ லக்ஷ்மணேந ।
க்ருதாபிஷேகஸ்த்வக ராஜபுத்ர்யா
ருத்ரஸ்ஸ விஷ்ணுர்பகவாநிவேச: ॥

இஙனனே தேவர்களாலும் மகர்ஷிகளாலும் வழுத்தப்படுவோன் சிவபெருமானே யென்பது விளக்கப்பட்டது.

இனிச்சிவபெருமானே சர்வ ஜகத்திற்கும் நியந்தா என்பதை விளக்கத்தொடங்கி முதலில் இராமபிரான் சீதை யிருப்பிடம் அறியாமையின் வைத்துச் சிவபரத்துவங் கூற வெழுந்தன வருஞ் செய்யுட்களென்பது.

வேறு

11. மதரரி நெடுங்கட் சீதைக்கோ ராண்டை
வாசத்தை யிராவணன் மனைக்கட்
டிதியுறப் பிரவர்த் தித்தது மிராமற்
கிராவணன் சிவணிவா ழில்ல
மதியினிற் றெரியா வண்ணமன் னேற்கு
மாலினைப் பூட்டிவைத் ததுவுங்
கதிதரு கடவு ளுனதுசங் கற்ப
மேன்பதே வான்மீகி கருத்தாம்.

(இ-ள்) கதிதருகடவுள்-ஞானத்தை உயிர்களுக்கு அளித்தருளும் பரம் பொருளே, மதர் அரி நெடுங்கண் சீதைக்கு-மதர்த்த செவ்வரியினையுடைய சீதாபிராட்டிக்கு, இராவணன் மனைக்கண்-இராவணனது அரண்மனையிலே, ஓராண்டை வாசத்தை-ஒருவருடம் வசித்தலை, திதியுறப் பிரவர்த்தித்ததும்-நிலைபெருக நடக்கும்படி செய்ததும், இராமற்கு-இராமபிரானுக்கு, இராவணன் சிவணி வாழ் இல்லம் மதியினில் தெரியாவண்ணம்-இராவணன் பொருந்தி வசிக்குமிடம் தன்னறிவில் தெரியாதபடி, அன்னேற்கு-அவ் விராமபிரானுக்கு, மயலினைப் பூட்டிவைத்ததுவும்-மயக்கத்தை யுண்டாக்கி வைத்ததும், உனது சங்கற்பம் என்பதே வான்மீகி கருத்தாம்-தேவரீருடைய திருவுளப்பாங்கு என்பதே வான்மீகிபகவானுடைய அபிப்பிராயமாகும். (எ-ம்)

வேறு

12. சடாயுவை யிராம னிராவணன் வாசஞ்
சாற்றெனப் பன்முறை யிரந்து
கடாவின ஞக வவனவற் கதனைக்
கரைந்திலன் பிறிதொன்று கரைந்தே
விடாவுயிர் துறந்தான் கபந்தனுஞ் சூசித்
துரைப்பனென் றுரைத்திலன் விமலா
படைமனன் சுக்கி ரீவனும் விடய
மிதனிலஞ் ஞானத்திற் பட்டான்

(இ-ள்) விமலா - அநாதியே மலத்தினீங்கியவரே, இராமன் சடாயுவை இராவணன் வாசம் சாற்று என-இராமபிரான் சடாயுவை இராவணனது இருப்பிடம் சொல்லு என்று, பன்முறை இரந்து கடாவினனுக-பலமுறை யாசித்துக் கேட்டானுகவும், அவன்-அச் சடாயு, அவற்கு அதனைக் கரைந்திலன்-இராமபிரானுக்கு அதனைக் கூருமல், பிறிது ஒன்று கரைந்து-சீதையை இராவணன் அபகரித்துச் சென்ற நேரம் விந்த மென்னும் முகூர்த்தமாதலின் கெடுத்த பொருள் கிடைக்குமென்பது முதலிய வேறுவிஷயங்கூறி, விடா உயிர் விட்டான்-நீங்காத தனது உயிர் துறந்தான், கபந்தனும்-கபந்தனென்பவனும், சூசித்து உரைப்பன் என்று உரைத்திலன்-வழிகாட்டிச் சொல்லுகிறேனென்று சொல்லி உரைத்தானில்லை, படைமனன் சுக்கிரீவனும் - வானர சேனைகளுக்கு அரசனுகிய சுக்கிரீவனும், விடயமிதனில் அஞ்ஞானத்திற்பட்டான்-இராவணனது இருப்பிடம் தெரியும் இந்த விஷயத்தில் அஞ்ஞானத்திற் பொருந்தினன் (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

1. 'யேந யாதி முஹூர்த்தேந வீதாமாதாய ராவண: ।
விப்ரணஷ்டம் தநம் க்ஷிப்ரம் தத்ஸ்வாமீ ப்ரதிபத்யதே ॥
விந்தோ நாம முஹூர்த்தோऽயம் ஸச காகுத்ஸ்த நாபுதத் ।

× × ×

இத்யுக்த்வா துர்லபாந் ப்ராணாந் முமோச பதகேச்வர: ॥
ப்ருஹி ப்ருஹீதி ராமஸ்ய ப்ருவாணஸ்ய க்ருதாஞ்ஜலே: ।

2. 'திவ்யமஸ்தி நமேஜ்ஞாநம் நஹிஜாநாமி மைதிலீம் ॥

× × ×

ஸ ஹி ஸ்தாநாநி ஸர்வாணி கார்த்ஸ்ந்யேந கபிபுங்கவ: ।
ந தஸ்யாவிதிதம் லோகே கிஞ்சிதஸ்தி ஹி ராகவ ।
யாவத்ஸூர்ய: ப்ரதபதி ஸஹஸ்ராம்சுரரிந்தம ।

3. 'ந ஜாநே நிலயம் தஸ்ய ஸர்வதா பாபரக்ஷஸ: ।
ஸாமர்த்யம் விக்ரமம் வாபி தௌஷ்குலேயஸ்ய வா குலம்' ॥

வேறு

13. விடயமிங் கிதனின் வேறொரு நிமித்தம்
விளம்பிடப் பட்டதன் றதனுற்
சடைமுடிப் பிரானே யுனதுசங் கற்ப
நிமித்தமாப் புலப்படுந் தகைத்தே
யடலுறு சினத்தா லுலகமூன் றையுந்தன்
னடிப்படுத் தியதனி யிராமன்
விடுவனே பகைவற் கோலாதறி தந்தா
லறிந்திடா மையின்வறி திருந்தான்

(இ-ள்) சடைமுடிப்பிரானே-கபர்த்த மென்னும் ஜடாபாரத்தை யுடைய முடியை யுடைய தலைவரே, விடயம் இதனின் - இராமபிரான் சீதா

பிராட்டி இருக்குமிடம் அறிய முடியாதிருந்த இந்த விஷயத்தில், இங்கு-இவ்விராமாயணத்தில், வேறு ஒரு நிமித்தம் விளம்பிடப்பட்டது அன்று-வேறு ஒரு காரணமுஞ் சொல்லப்பட்டிலது, அதனல்-ஆகையால், உனது சங்கற்பம்-தேவரீரது திருவுளப் பாங்கே, நிமித்தமா - காரணமாக, புலப்படுந் தகைத்து-அறியப்படுந் தன்மையை யுடையது, அடல் உறு சினத்தால்-கொல்லுதற்குக் காரண மாகப் பொருந்திய கோபத்தால், உலகம் மூன்றை யும்-சுவர்க்கம் மத்திமம் பாதாளம் என்னும் மூன்று உலகங்களையும், தன் அடிப் படுத்திய தனி இராமன்-தனது அரசாட்சியின் கீழ்க்கொண்டுவந்த ஒப்பற்ற இராமபிரான், அறிதந்தால்-(இராவணன் இருக்கு மிடம்) தெரிந்தால், பகைவற் கொலாது விடுவனே-அப்பகைவனுகிய இராவணனைக் கொல்லாமல் விட்டு விடுவானே? (விடான்), அறிந்திடாமையின்-(அப் பகைவனிருப்பிடம்) அறியாமையால், வறிது இருந் தான்-(இராமபிரான் யாதொன்றுஞ் செய்யாது) வாளா விருந்தான் (எ-ம்).

இனி வேறுமோர் ஏதுக்கூறிச் சிவபிரானே சர்வநியந்தா என்பது கூறுகின்றது வருஞ் செய்யு ளென்பது.

வேறு

14\. உலகமோரு மூன்றினையுஞ் சீதைக் காக
வோருங்கழிப்ப லெனராமன் முனிந்து வில்லிற்
பலமுடைய பகழிதனைக் கோத்தெழுந்த விடத்துப்
பயத்தினு னுகவிரா வணனிறக்கிற் றமக்கு
நலமதுறு மேயென்னு மிச்சையா னுக
நாகரினத் தேவனேனு நணுகி ராமற்
கலமரலங் கோருவகங்கை சீதை வாச
மறைந்திலனு லீண்டுமுன தாணையே யேது.

(இ-ள்) சிவபிரானே, உலகம் ஒரு மூன்றினை யும்-சுவர்க்கம் மத்திமம் பாதாளமென்னும் மூன்று உலகங்களையும், சீதைக்காக-சீதையின் பொருட்டு, ஒருங்கு அழிப்பல் என-முற்றிலும் அழிப்பே னென்று, இராமன் முனிந்து-இராமபிரான் கோபங் கொண்டு, வில்லில் பலமுடைய பகழிதனைக்கோத்து எழுந்த இடத்து-தன்னுடைய கோதண்டத்தில் வலிமை பொருந்திய அம்பைப்பூட்டி எழுந்த பொழுது, நாகர் இனத்து எவனேனும்-தேவசமூகத் தில் எவனேனும், பயத்தினுகை-இராமபிரான்பாற் கொண்ட அச்சத்தாலாவது, இராவணன் இறக்கின்-(நமக்குத் தீமை புரிகின்ற இராவணன் இறந்தால், தமக்கு நலமது உறுமே என்னும் இச்சையானுகை-தங்களுக்கு நன்மை உண்டாகுமே என்னும் விருப் பத்தாலாவது, நணுகி-அடைந்து, ராமற்கு அலமரல் ஒருவ-இராமபிரானுக்கு மனச்சுழற்சி நீங்க, நங்கை சீதை வாசம் அறைந்திலன்-பெண்ணிற் சிறந்தாளா கிய சீதாபிராட்டியின் இருப்பிடம் கூறினனல்லன், ஈண்டும்-இவ்விடயத்திலும், ஏது-அங்ஙனங் கூறா மைக்குக்காரணம், உனது ஆணையே-தேவரீரது திருவாணையேயாம் (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

ஈ தர்மஸ்த்ராயதே வீராம ஹ்ரியமாணும் மஹாவநே ।

× × ×

நாசயாமி ஜகத்ஸர்வம் த்ரைலோக்யம் ஸசராசரம் ॥

இத்யுக்த்வா ரோஷதாம்ராக்ஷோ ராமோநிஷ்பீட்ய கார்முகம் ॥

இந்நான்கு செய்யுளானும் சிவசங்கற்பமே அனைத்துக்குங் காரணமென்பதும், அதனையின்றி யாதும் அமையுமாறில்லையென்பதும் கூறப்பட்டன.

இனிக் கங்காவதாரம் பற்றிச் சிவபரத்துவம் கூற எழுந்தது வருஞ் செய்யுளென்பது.

வேறு

15\. எம்பெருமா னினதுமுடிக் கங்கைவீழ்ந் ததனு
லெய்திற்றுப் புண்ணியமெய் யென்று மத்தான்
வெம்பாவந் தீர்க்குஞ்சா மர்த்தியமற் றதற்கு
மேவியதென் றுந்தேவர் முதலி யோர்தா
மம்புவியைச் சென்றப்போழ் ததனின் மூழ்கி
னுரென்றும் வான்மீகி கவிஞ ரேறு
செம்பொருளால் விசுவாமித் திரவசன மிதனைத்
தெளிதரரா மாயணத்திற் சேர்த்தி யாத்தான்

(இ-ள்) எம்பெருமான்-எம்பெருமானே, வான்மீகி கவிஞர் ஏறு- கவிராஜ சிங்கமாகிய வான்மீகி முனிவன், கங்கை-கங்காநதியானது, நினது முடி வீழ்ந்ததனுல்-தேவரீருடைய ஜடாபாரத்தில் விழுந்த காரணத்தால், புண்ணிய மெய் எய்திற்று என்றும்-பரிசுத்த சரீரத்தை அடைந்தது என்றும், அத்தால்-அதனுல், அதற்கு-அக் கங்காநதிக்கு, வெம்பாவம் தீர்க்கும் சாமர்த்தியம் மேவியது என்றும்-கொடிய பாவங்களை நீக்குகின்ற வன்மை பொருந்திற்றென்றும், அப்போழ்து- (அங்ஙனம் கங்கையானது சிவபிரானது சடையில் வீழ்ந்து புண்ணிய சரீரம் பெற்றுப் பாவந்தீர்க்கும் சாமர்த்தியம் அடைந்த) அப்பொழுதில், தேவர் முதலியோர்தாம்-தேவர்கள் ருஷிகணங்கள் கந்தருவர்கள் முதலானவர்கள், அம்புவியைச் சென்று-பூமியிற் போய், அதனில் மூழ்கினுரென்றும்-அக்கங்கா நதியில் நீராடினுர்களென்றும் வரும், விசுவாமித்திர வசன மிதனை-விசுவாமித்திரர் வாக்கியமாகிய இதனை, செம்பொரு

ளால்-(ஏனைய இலக்கணைப் பொருள், குறிப்புப் பொருளாலல்லாமல்) செம்பொருளால், தெளிதரா-நாமெல்லாம் நன்கு தெளியும்படி, ராமாயணத்தில் சேர்த்து யாத்தான்-(தான் பாடிய) இராமாயணத்தில் சேர்த்துப்பாடினன் (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

தத்ர தேவர்ஷிசத்தர்வ வஸுதாதலவாஸிந: ।
பவாங்க பதிதம் தோயம் பவித்ரமிதி பஸ்ப்ருசு: ॥
சாபாத்ப்ரபதிதா யேச ககாத்வஸு தாதலே ।
க்ருத்வா தத்ராபிஷேகாத்தே பபூவுர்கத கல்மஷா: ॥
தூதபாபா: புநஸ்தேந தோயேநாத ஸுபாஸ்வதா ।
க்ருதாபிஷேகா கங்காயாம் பபூவுர்விகதக்லமா: ॥

இதனனே சிவபெருமானது அளவிலாற்றலுடைமையும், பேரருட்டிறமும் திவ்விய மங்களத் தன்மையும் கூறப்பட்டன.

இனிப் பரசுராம வசன பரிசிலனையால் சிவபரத்துவம் கூறவெழுந்தன வருஞ் செய்யுட்களென்பது.

வேறு

16\. அளவில்பே ராற்றலுடைப் பிரானே யுன்ற
ணடற்சிலையின் விண்டுசிலைக் கதிகத் தன்மை
யுளமயலாற் கருதுமொரு பரசி ராம
னுன்னிலரி யதிகனெனத் தேவ ராளு
ரேளிமையுற வுரைத்தனரேன் றுரைத்த கூற்றிங்
கியாருமெளி துணரவலி யின்றி மாய்ந்து
பழிபடுமுன் னுடைச்சூலம் விண்டுவுடைச் சரத்திற்
பலமிகவு முடைத்தென்ற விராமன் கூற்றல்

(இ-ள்) அளவில் பேராற்ற லுடைப் பிரானே-அனந்த சக்திமானுகிய சிவபிரானே, உன்னில்-ஆராய்ந்தால், உன்றன் அடற்சிலையின்-தேவரீரது வலிமையுடைய வில்லினும், விண்டு சிலைக்கு-விஷ்ணு மூர்த்தியின் வில்லுக்கு, அதிகத் தன்மை-சிரேஷ்டத் தன்மையை, உளம் மயலாற் கருதும் ஒருபரசி ராமன்-மனமயக்கத்தால் எண்ணிய ஒப்பற்ற பரசு ராமன், அரி அதிகனெனத் தேவரானோர் எளிமை யுற உரைத்தனர் என்ற கூற்று-விஷ்ணுமூர்த்தி யாரினுஞ் சிறந்தோனென்று தேவர்கள் எளிதிற் கூறினுரென்று சொன்னசொல், உன்னுடைச் சூலம் - தேவரீரது சூலப்படை, விண்டுவுடைச் சரத்தின்-விஷ்ணுமூர்த்தியினுடைய நாராயணுஸ் திரத்தினும், பலம் மிக உடைத்து என்ற இராமன் கூற்ருல்-வலிமை மிகவுடையது என்று கூறிய இராமபிரானது வசனத்தால், இங்கு-இவ்விடத்து, யாரும் எளிது உணர-எவரும் எளிதில் உணருமாறு, வலியின்றி - வலிமையில்லாமல், மாய்ந்து-கெட்டு, பழிபடும்-பழிப்படையும் (எ-ம்)

இதற்குரிய பிரமாணம் முன் நான்காவது செய் யுளுரையிற் காட்டப்பட்டது.

வேறு

17. விண்டுவைசிற் கதிகனென வுரைத்தமுதல் வசன
மிகுசினத்தாற் றேடமுற்ற பரசி ராமன்
விண்டவுரை யன்றேமற் றரிசரத்தி னுனது
சூலம்வலி யுடைத்தேன்ற விரண்டாங் கூற்றே
வேண்டகைய வறவடிவ னுன ராம
னியம்பியதா மினியதுவு மெம்பி ரான்பால்
பண்டுபுரி தவத்தானீ யோரமரி லென்னிற்
பலவானு கேனவவற்கீ வரப்பாது காப்பாம்.

(இ-ள்) எம்பிரான்-எம்பெருமானே, விண்டுவை நிற்கு அதிகனென உரைத்த முதல் வசனம்-விஷ்ணு மூர்த்தியைத் தேவரீரினும் சிரேட்டனென்று கூறிய முதற்கூற்று, மிகு சினத்தால் தோடம் உற்ற பரசிராமன் விண்டவுரை அன்றே-மிக்க சினத்தோடு குற்றமடைந்த பரசுராமன் கூறிய கூற்றன்றோ (ஆம்), மற்று-இனி, அரிசரத்தின்-விஷ்ணுமூர்த்தியினது நாராயணாஸ்திரத்தினும், உனது சூலம் வலியுடைத்து என்ற இரண்டாங் கூற்றோ-தேவரீரது சூலப்படை வலிமையுடையது என்று கூறிய இரண்டாம் வசனமோ, எண்தகைய அறவடிவனை ராமன் இயம்பியதாம்-நன்குமதிக்கப் படும் தகுதியை யுடைய தருமமூர்த்தியாகிய இராம பிரான் கூறியதாகும், இனி-பின்னர், அதுவும் (அமரேற்றகாலத்து வில்லிற்ற) அச் செயல்தானும், பண்டு மால் புரி தவத்தால்-முற்காலத்தில் விஷ்ணு மூர்த்தி மைநாக பர்வதத்துச் செய்த தவங்காரணமாக, ஓர் அமரில் என்னின் பலவான் ஆக என-நீ ஒப்பற்ற போரில் நம்மினும் வலிமையுடையை யாகுக என்று, அவற்கு-அவ் விஷ்ணுமூர்த்திக்கு, நீ ஈ வரப்பாதுகாப்பாம்-தேவரீர் அருளிய வரத்தினை நன்கு காத்தற் பொருட்டாகும் (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

1. 'தர்மோ விக்ரஹவாந்ராம:'

2. மகாபாரதம்:-

அபிசேத்ஸமரம் ப்ராப்ய பவிஷ்யஸி மமாதிக: ।

இவையிரண்டு செய்யுளானும் சத்துவகுண முடையோராற் சிவபெருமானர் துதிக்கப் படுவோ

ரென்பதும் சிவபெருமானாரது பரமபக்தர் திருமா லென்பதுவுங் அப்பெருமானார் அடியார்க் கெளிய ரென்பதுங் கூறப்பட்டன.

முடிந்தது முடித்தல் கூறுகின்றதிச் செய்யு ளென்பது.

வேறு

18. காப்பியரத் தினமாகி யிலங்கிரா
மாயணத்திந் நெறியாற் கற்ற
மாப்புலவன் வான்மீகி சுருதிபல
முறையிடுமுன் பரத்து வந்தா
னுப்புகறற் கரியபுக ழிராமனவன்
புகழ்ச்சரித முகத்தா னன்று
யாப்புறுக்கற் பாலதென வெடுத்துலகம்
வியப்பெய்த விசைத்தா னம்மா.

(இ-ள்) சிவபிரானே, கற்றமாப்புலவன் வான் மீகி-வேத முதலிய சாஸ்திரங்களைக் கற்ற மகாகவி யாகிய வான்மீகி பகவான், சுருதி பல முறையிடும் உன் பரத்துவம் - வேதங்களனைத்தும் முறையிடு கின்ற தேவரீரது மேன்மையானது, காப்பிய இரத் தினமாகி இலங்கு இராமாயணத்து-உத்தம காவ்ய ரத்தினமாகி விளங்குகின்ற இராமாயணத்தில், நா புகறற்கு அரிய புகழ் இராமனவன் புகழ்ச் சரித முகத்தால்-நாவினாலே சொல்லுதற்கு அரிய கீர்த்தி யையுடைய இராமபிரானது புகழ் மிக்க சரிதவாயி லாக, இந் நெறியால்-இந்த முறையாக, நன்றாய் யாப் புறுக்கற் பாலதென எடுத்து-நன்றாக வலியுறுத்தற் பால தென்று தொடங்கி, உலகம் வியப்பு எய்த இசைத்தான்-கற்றறிந்தோர் ஆச்சரியம் அடையு மாறு வியத்தியினாற் கூறினான் (எ-ம்)

சுருதிகூறும் சிவபரத்துவமாவது:-

அதர்வசிகோபநிடதம்:

'ஸர்வமிதம் ப்ரஹ்ம விஷ்ணு ருத்ரேந்த்ராஸ்தே ஸம்ப்ரஸூயந்தே ஸர்வாணி சேந்த்ரியாணி ஸஹபூதைர் நகாரணம்' என்பது முதல் 'சிவ ஏகோ த்யேய: சிவங்கர: ஸர்வ மந்யத் பரித்யஜ்ய ஸமாப்தாऽதர்வசிகா' என்பது முடியவுள்ள பகுதி.

இதனானே வேதத்திற் பிரதிபாதிக்கப்படும் முழு முதற்கடவுள் சிவபெருமானே யென்பது விளக்கப்பட்டது.

இனி, இராமாயணம் விபீஷண சரணாகதி சாஸ்திரமென்னும் பரபக்க நிராகரணங் கூறவெழுந்தன வருஞ் செய்யுட்களென்பது.

வேறு

19. ஆங்கொருசா ராரிரா மாயணமிங்
கிதன்விடய மரக்கர் வேந்தா
மோங்குபுகழ் விபீடணன்றன் சரண்புகுதி
யாமென்ப ருதுபோ ருந்தா
தீங்கதனுக் கேதுதா னென்னையெனிற்
கூறுதுமுத் தமமா மிந்த
வீங்குபொருட் காப்பியக்கு வெளிப்படையாஞ்
சரண்புகுதி விரோத மத்தான்.

(இ-ள்) சிவபிரானே, ஒரு சாரார்-(வைஷ்ணவ அபிமானிகளாகிய) ஒரு பகுதியினர், இராமாயணம் இதன் விடயம்-இவ்விராமாயணத்தில் கூற வெடுத்துக்கொண்ட பொருள், அரக்கர் வேந்து ஆம் ஓங்கு

புகழ் விபீடணன்றன் சரண்புகுதியாம் என்பர்- இராக்கத சிரேட்டனாகிய மிக்க கீர்த்தியையுடைய விபீஷணனது சரணாகதியாகுமென்று கூறுவர், உ-து பொருந்தாது-அங்ஙனம் கூறுதல் (அறிந்தாரவைக்களத்துப்) பொருந்தாது, அதனுக்கு ஏதுதான் என்னை யெனிற் கூறுதும்-அங்ஙனம் பொருந்தாதென்றமைக்குக் காரணந்தான் என்னை யென்றால் சொல்லுவோம், உத்தமமாம்-உத்தமமாகிய, வீங்கு பொருட்காப்பியக்கு - நிறைந்த பொருளையுடைய காவ்யத்திற்கு, வெளிப்படையாம் சரண்புகுதி விரோதம் அத்தான்-வாச்சியப் பொருளாயுள்ள சரணாகதி விரோதமுறு மதனால் (எ-ம்)

காப்பியம் மூவகைப்படும் உத்தமம் மத்தியமம் அதமமெனா. அவற்றுள் வாச்சியார்த்தமின்றி வியங்கியார்த்தமுள்ளது உத்தம காப்பியம். வாச்சியத்தின் குணீபூதமாய் வியங்கியார்த்தமுள்ளது மத்தியம காப்பியம். வியங்கியார்த்த மில்லது அதம காப்பியம்.

வேறு

20. ஒருவனொரு பயனடைதல் விடய மாயி
    னுயர்புடைய தாதலினா லரக்கர் வேந்தின்
வரனுடைய சரண்புகுதி விடய மீண்டு
    வதுக்கற்பாற் றெனிற்சுக்கி ரீவனைமுன் னிராமன்
சரணடைவு முக்கியமாங் காக்கை ராமற்
    சார்ந்ததுமற் றதனினுயர் வுடைத்தாஞ் சான்றோர்
உரைசெய்வர் தனத்தின்மனை மனையி னுன்மா
    வுயர்ந்தவென வெங்குநிறைந் துறைபி ரானே.

(இ-ள்) எங்கும் நிறைந்து உறை பிரானே-எப்பொருளிலும் அது அதுவாய்க் கலந்து நீக்கமின்றி நிற்கும் பெருமானே, விடயம் ஆயின்-காவ்யத்தின்

விஷயத்தை ஆராய்ந்தால், ஒருவன் ஒருபயன் அடைதல் உயர்வுடையது ஆகலினுல்-ஒருவன் ஒரு பிரயோசனத்தை அடைதலாகிய விஷயம் மேம்பாடு டையதாதலின், ஈண்டு - இவ்விராமாயணத்தில், அரக்கர் வேந்தன் வரனுடைய சரண்புகுதி விடயம் வகுக்கற்பாற்று எனில்-இராக்கத சிரேட்டனுகிய விபீஷணனுடைய சரணுகதி விஷயமாகச் சொல்லற் பாலதென்னின், இராமன் சுக்கிரீவனே முன் சரண் அடைவு முக்கியமாம் - இராமபிரான் சுக்கிரீவனே முன்பு சரணடைந்தது (விபீஷண சரணுகதியினும்) உயர்வுடையதாகும், அதனின்-அவ்விராம சரணுகதி யினும், காக்கை ராமற் சார்ந்தது உயர்வுடைத்தாம்-(ஜயந்தனுகிய) காகம் இராமபிரானேச் சரணடைந்தது உயர்வுடையதாகும், (எவ்வாறெனின்) சான் ஸ்ரோர்-பெரியோர், தனத்தின் மனே மனேயின் ஆன்மா உயர்ந்த என உரைசெய்வர்-செல்வத்தின் மனேவி யும் மனேவியின் தன்னுயிரும் உயர்வுடையன என்று கூறுவராதலின் (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

1. ஸுக்ரீவம் சரணம் கத:
2. த்ரீம்ல்லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ சரணம் கத:

3. உற்றுழி யுதவச் செல்வ
   மோம்புக செல்வந் தன்னிற்
பொற்றொடி நங்கை தன்னைப்
   போற்றுக எந்த ஞான்றும்
மற்றையம் மடந்தை தன்னின்
   மாண்பொரு ளதனின் மேன்மை
பெற்றிடு தன்னுன் மாவைப்
   பேணுக என்ப மாதோ.

-இதோபதேச மொழிபெயர்ப்பு.

வேறு

21. வீடடைதற் பொருட்டுவிபீ டணன் சரணம்
புகுந்தமையின் வேறி ரண்டி
னேடுறவைத் தொப்பநோக் குதல்பொருந்தா
தெனினற்றன் றுயரி ராமன்
பீடுடைமா ருதியிருவர் * மொழியானும்
விபீடணன்றன் பேச்சி னானு
நாடரசா டற்பொருட்டங் கவன்சரணம்
புகுந்தமைநன் கறித லாலே.

(இ-ள்) சிவபிரானே, விபீடணன் வீடு அடைதற்பொருட்டுச் சரணம் புகுந்தமையின்-விபீஷணன் மோக்ஷமெய்தும் பொருட்டு இராமபிரானைச் சரணுகதி யடைந்தமையால், வேறு இரண்டினேடு உறவைத்து ஒப்பநோக்குதல் பொருந்தாது எனின்-மற்றைய இராம சரணுகதி காகசரணுகதி யென்னுமிரண்டனேடும் ஒருங்குவைத்து அவற்றேடொப்ப விபீஷணன் சரணுகதியையும் பார்த்தல் பொருந்தாதென்னின், அற்றன்று - அவ்வாறன்று, உயர் இராமன் பீடுடை மாருதி இருவர் மொழியானும்-நற்குணங்களால் உயர்ந்த இராமபிரான் பெருமையுடைய அனுமானுகிய இருவருடைய வசனங்களாலும், விபீடணன்றன் பேச்சினுனும்-விபீஷணனது வசனத்தாலும், அவன்-அவ்விபீஷணன், அங்கு-அவ்விடத்து, நாடு அரசு ஆடற் பொருட்டுச் சரண் புகுந்தமை நன்கு அறிதலால்-இலங்காராஜ்யத்தை அரசாளுதற் பொருட்டுச் சரணுகதி யடைந்தமை நன்கு அறியப்படலால் (எ-ம்)

---

* 'மொழியினுனும் பிரியமொடங் கவனுரைத்த வுரையினுனும்' என்னும் முற்பதிப்புப் பாடம் செய்யுளுக்கேற்பப் பொருள் கெடாது இவ்வாறு அமைக்கப்பட்டது.

இதற்குப் பிரமாணம்:-

அநுமான் வசனம்:-

'உத்யோகம் தவ ஸம்ப்ரேக்ஷ்ய மித்யாவ்ருத்தம் ச ராவணம் |
வாலிநம் ச ஹதம் ச்ருத்வா ஸுக்ரீவம் சாபிஷேசிதம் |
ராஜ்யம் ப்ரார்தயமாநச்ச புத்திபூர்வமிஹாகத: | '

ஸ்ரீராமபிரான் வசனம்:-

'ந வயம் தத்குலீநாச்ச ராஜ்ய காங்க்ஷீ ச ராக்ஷஸ: |
பண்டிதா ஹி பவிஷ்யந்தி தஸ்மாத் க்ராஹ்யோ விபீஷண: | '

விபீஷணன் வசனம்:-

'யயோர் வீர்யம் ஸமாச்ரித்ய ப்ரதிஷ்டா காங்க்ஷிதா மயா |
தாவுபௌ தேஹநாசாய ப்ரஸுப்தௌ புருஷர்ஷபௌ || '

வேறு

22. இலங்கையைமித் திரர்தம்மைத் தனங்களையென்
னனுபவங்க டம்மை யேந்தான்
மனங்கொளநான் றுறந்தேனேன் றவனுரைத்த
வசனம்விரத் தியினு லன்று
மிலங்குபுக ழிராமனவன் றன்னருளாற்
பெறநின்ற விராச்சி யத்தி
னுலங்கோள்புய முடையன்னோற் குறுநகைபோ
தரலினெழி புரையான் மன்னே.

(இ-ள்) சிவபிரானே, அவன்-அவ்விபீஷணன், ஏந்தால்- (இராமபிரானகிய) தலைவனே, இலங்கையை-இலங்கையையும், மித்திரர் தம்மை-சிநேகிதர்களையும், தனங்களை-செல்வங்களையும், என் அநுபவங்கள் தம்மை-மற்றும் என் அநுபவப் பொருள்களெல்லாவற்றையும், நான் மனங்கொளத் துறந்தேன் என்று-நான் மனப்பூர்வமாக விட்டு நீங்கினேனென்று, உரைத்த வசனம்-சொன்ன வசனம்,

விரத்தியினல் அன்றும்-உலகப் பொருண்மீதுள்ள வெறுப்பினல் அன்று, (என்னையெனின்) இலங்கு புகழ் இராமனவன்றன் அருளாற்பெறுகின்ற இராச்சியத்தில்-விளங்குகின்ற கீர்த்தியையுடைய இராம பிரானது அனுக்கிரகத்தால் தான் இனி அடையும் இராச்சிய பாரத்தில், உலம்கொள் புயமுடை அன்னேற்கு-திரண்டகற்போலும் புயத்தையுடைய அவ் விபீஷணனுக்கு, உறுநசை - உளதாகிய விருப்பம், ஒழிபு உரையாற் போதரலின்- (எனது இராச்சியமும் சீவிதமும் சுகங்களும் உன்னைப் பொறுத்திருக்கின்றன என்னும்) எஞ்சிய அவனது வசனத்தால் தெரியக்கிடத்தலின் (எ-ம்)

விபீஷணன் வசனம்:-

'பரித்யக்த்வா மயா லங்கா மித்ராணி ச தநாநி ச |
பவத்கதம் மே ராஜ்யம் ச ஜீவிதம் ச ஸுகாநி ச ||'

வேறு

23. வள்ளலிரா கவன்விபீ டணன் கருத்தை
யுணர்ந்தவனு லிராவ ணற்கங்
குள்ள பல முதலியன வறிந்தவனைக்
கோல்வனென வுரைத்த சூளைத்
தள்ளுரு வகைமுடித்து மற்றவறகு
முடிசூட்டித் தனியி லங்கை
யுள்ளமகிழ்ந் தரசாள வுரைத்தவா
றினிதளித்தா னுமைபி ரானே.

(இ-ள்) உமை பிரானே - உமாகாந்தனே, வள்ளல் இராகவன் - கொடையாளியாகிய இராம பிரான், விபீடணன்றன் கருத்தை உணர்ந்து- விபீஷணனது அபிப்பிராயத்தை 'அவன் சொல்

லால்) அறிந்து, அவனல்-அவ்விபீஷணன் வாயிலாக, இராவணற்கு அங்கு உள்ள பலம் முதலியன அறிந்து-இராவணனுக்கு இலங்கையிலேயுள்ள பலம் முதலியனவைகளைத் தெரிந்துகொண்டு, அவனைக் கொல்வனென உரைத்தருளி-(பின்னர்) அவ்விராவணனை நான் கொல்வேனென்று கூறியசபதத்தை, தள்ளுருவகை முடித்து - தவறுதபடி முடித்து, அவற்கு முடிசூட்டி - அவ்விபீஷணனுக்கு பட்டாபிஷேகஞ்செய்து, தனி-பொதுவின்றி, இலங்கை-இலங்காபுரியை, உள்ள மகிழ்ந்து அரசாள-மனமுவந்து அரசாளும் வண்ணம், உரைத்தவாறு-தான் கூறியவாறு, இனிது அளித்தான்-நன்கு விபீஷணனுக்கு கொடுத்தருளினன் (எ-ம்)

இதற்குப் பிரமாணம்:-

1. அஹத்வா ராவணம் ஸங்க்யே ஸபுத்ரம் ஸஹபாந்தவம் ।
அயோத்யாம் ந ப்ரவேக்ஷ்யாமி த்ரிபிஸ்தைர் ப்ராத்ருபி: சபே ॥

2. 'ஆக்யாஹிமம தத்வேந ராக்ஷஸாநாம் பலாபலம்' ॥

இவை ஐந்து செய்யுளானும் இராமாயணம் சரணாகதி சாஸ்திரமென்பதனை மறுக்குமுகத்தான் சிவபிரானொருவரே அடியார்க்கெளியரென மேற்கூறியது வலியுறுத்தப்பட்டது.

இனி வாழ்த்துக்கூற எழுந்தது வருஞ்செய்யுளென்பது.

வேறு

24. முற்கவியாம் வான்மீகி முனியை யன்னேன்
மொழிந்திடுகாப் பியம்வகித்த விராமனென்னுஞ்
சக்கிரவர்த் தியையன்னோர் * இருவரானோர்
தமதன்பா மிலக்குமிக்குத் தான மாகிப்
பொற்புடைய விசுவத்திற் கான்மா வாகிப்
பூரணமாஞ் சிவபிரான் றன்னை நெஞ்ச
நெக்குருக நினையாம னினைந்து போற்றி
நீணிலத்தி னுறவணங்கி வாழ்து மன்றே.

(இ-ள்) முற்கவியாம் வான்மீகி முனியை-ஆதிகவியாகியவான்மீகி மகர்ஷியையும், அன்னேன் மொழிந்திடு காப்பியம் வகித்த இராமனென்னுஞ் சக்கிரவர்த்தியை-அவர் அருளிச்செய்த இராமாயணகாவ்ய நாயகத் தன்மை பூண்ட இராமபிரானென்னும் சக்கிரவர்த்தியையும், அன்னோர் இருவரானோர் தமதன்பாம் இலக்குமிக்குத் தானமாகி-வால்மீகி இராமபிரானென்னும் அவ்விருவரது பக்தி லக்ஷ்மிக்குரிய இடமாகி, பொற்புடைய விசுவத்திற்கு ஆன்மாவாகி-பொலிவினையுடைய உலகனைத்திற்கும் உயிராகி, பூரணமாம்-நிறைந்த பொருளாகும், சிவபிரான் றன்னை-ஸ்ரீ சிவபெருமானையும், நெஞ்சம் நெக்குருக-மனம் கசிந்துருகுதலான், நினையாமல் நினைந்து-அயரா அன்பால் நினைந்து, போற்றி-துதித்து, நீணிலத்தில் உறவணங்கி-பெரிய பூமியிற் பொருந்துமாறு வணங்கி, வாழ்தும்-வாழ்வோம்.

இதனானே சிவபெருமானது மெய்யன்பரும் அப்பெருமானுமே வணக்கத்திற் குரியாரென்பது கூறப்பட்டது.

முற்றிற்று.

---

* செய்யுளுக்கேற்பப் பொருள் கெடாது இது சேர்க்கப்பட்டது.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
11	12	ஸ்நாநம	ஸ்நாநம்
11	12	ச்ராத்தம	ச்ராத்தம்
11	25	கூறவெழுந்து	கூறவெழுந்தது
14	24	ப்ராஹ்மணேபயோ	ப்ராஹ்மணேப்யோ
15	11	வழிபட்டனமன்ற்	வழிபட்டனன்மற்
15	16	இராபிரான்	இராமபிரான்
16	9	ஙாச்யமேதார்	ஙாச்வமேதாத்
22	23	வீநாம	வீநாம்